**தலைமைச் செயல் அலுவலரின் கடிதம்**

# தலைசிறந்த பாதுகாப்பு செயல்திறன் மற்றும் வாடிக்கையாளர் அங்கீகரிப்பு

*6/24/2021 வெளியிடப்பட்டது*

கூப்பர் ஸ்டாண்டர்டின் செயல்திறன் சுட்டிக்காட்டிகள் தொடர்ந்து அதிகரிக்கின்றன, அதே மாதிரி உலகெங்கிலும் தடுப்பூசி விகிதங்கள் மற்றும் நம்பகமான "புதிய இயல்புநிலையின்"தொடக்கம் பற்றிய நேர்மறை செய்திகளும் அதிகமாகிவிட்டன.

மே மாதத்தில் பாதுகாப்பில் மகத்தான புதிய சாதனையை எங்கள் குழு எட்டியது, இதில் பதிவு செய்யப்பட்ட ஒரே ஒரு சம்பவத்தை தவிர்த்து- இது கிட்டத்தட்ட நிறைவான பாதுகாப்பு மாதமாக இருந்தது! அந்த ஒரு சம்பவத்தையும் பெரிதாகவே கருதுகிறோம், ஆனாலும் பாதுகாப்பில் எங்கள் குழுவின் அர்ப்பணிப்பு குறித்து நான் பெருமைப்படுகிறேன், இது போன்ற சாதனைகள் எங்கள் கவனத்தை குறித்த நேர்மறையான முடிவுகளுக்கான சான்றாகும். பலமான பாதுகாப்பு செயல்திறன் எங்கள் செயல்பாடுகள் அனைத்திலும் நாங்கள் சிறந்து விளங்குவதற்கான உறுதியான அடித்தளத்தை அமைக்க உதவுகிறது, மேலும் தரம் மற்றும் விநியோகம் போன்ற பிற முக்கிய அளவீடுகளுக்கு சாதகமாக இருக்கிறது.

ஜூன் மாதம் முழுவதும், கூப்பர் ஸ்டாண்டர்ட் பாதுகாப்பு குறித்த எங்கள் உறுதிப்பாட்டை தொடர்ந்து வலுப்படுத்தி, மற்றும் எங்கள் வசதிகளுக்கு உள்ளேயும் வெளியேயும் முக்கியமான சுகாதார மற்றும் பாதுகாப்பு விஷயங்களை பற்றி, எங்கள் முதல் *உலகளாவிய* பாதுகாப்பு மாதத்திலேயே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. மாத இறுதியில் கூப்பர் ஸ்டாண்டர்ட் போர்ட்டலின் முகப்புப்பக்கத்தில் சில சிறப்பம்சங்களை உங்களுடன் பகிர்வதை எதிர்நோக்குகிறோம்.

கூப்பர் ஸ்டாண்டர்டிற்கு இரண்டு மகத்தான விருதுகளை வழங்கி ஜெனரல் மோட்டார் அங்கீகரித்ததை பகிர்வதிலும் நான் மிக மகிழ்ச்சியடைகிறேன். தொடர்ச்சியாக நான்காவது ஆண்டாக, நிறுவனத்திற்கு ஆண்டின் சப்ளையர் என்ற பெயர் கிடைத்தது, எங்கள் சீலிங் மற்றும் ஃப்யூயல் மற்றும் பிரேக் டெலிவரி உற்பத்தி லைன்களும் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக இந்த விருதைப் பெற்றன. எங்கள் நிறுவனத்தின் ஃபோர்ட்ரெக்ஸ்® வேதியியல் தளமானது GM இன் ஓவர் டிரைவ் விருதால் கௌரவிக்கப்பட்டது. மையப்படுத்தப்பட்ட முன்முயற்சிகளுடன் மற்றும் அதிநவீன முறையில் வணிக முடிவுகளை வழிநடத்த உதவும் GM இன் ஆறு GPSC முன்னுரிமைகளில் அடையப்பட்ட தலைசிறந்த சாதனைகளை ஓவர் டிரைவ் விருது அங்கீகரிக்கிறது. குறைந்த கார்பன் தடம் மற்றும் உமிழ்வைக் குறைக்க உதவும் திறனுக்காக ஃபோர்ட்ரெக்ஸ்® ஐ GM தேர்ந்தெடுத்தது.

COVID-19 வழக்குகள் தொடர்ந்து குறைவதால், ஆசியா பசிபிக் பகுதிக்கு வெளியே உள்ள எங்கள் 17 வசதிகளும், எங்கள் பாதுகாப்பான செயல்பாட்டுத் திட்டத்தின் 2 ஆம் கட்டத்திற்குள் அல்லது அதற்கும் மேற்பட்ட நிலைக்குள் நுழைந்துவிட்டன. எங்கள் வசதிகளில் COVID அபாயத்தைக் குறைக்க விடாமுயற்சியுடன் நாங்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும், மேலும் ஊழியர்கள் தங்கள் பகுதியில் கிடைக்கும் தடுப்பூசி வாய்ப்புகளை ஆராயுமாறு ஊக்குவிக்கப்படுகிறார்கள். எங்கள் அட்லாகோமுல்கோ, மெக்ஸிகோ வசதியிலிருந்து ஒரு ஊழியர் இறந்ததை நான் மிகுந்த வருத்தத்துடன் பகிர்ந்து கொள்கிறேன். இக்னாசியோ லோபஸ் மெண்டோசாவின் குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் சகாக்களுக்கு எங்கள் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஜூன் 11ஆம், தேதி நிலவரப்படி, COVID-19 -ஆல் பாதிக்கப்பட்ட ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை 41ஆக இருந்தது.

உங்களையும் மற்றவர்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கவும், எங்கள் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த ஆதரவை வழங்கவும் நீங்கள் தொடர்ந்து தலைசிறந்து செயல்பட்டதற்கு நன்றி.

**ஜெஃப் எட்வர்ட்ஸ் (Jeff Edwards)**
தலைவர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி




**தடுப்பூசிகளை ஊக்குவிக்கிறோம்**

COVID-19 நோயால் பாதிக்கப்பட்ட சிலர் வைரஸிலிருந்து மீண்ட நீண்ட காலத்திற்குப் பிறகும் சோர்வு, வாசனை மற்றும் சுவை இழப்பு போன்ற அறிகுறிகளால் பாதிக்கப்படலாம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தடுப்பூசி வைரஸைத் தடுக்க உதவுவது மட்டுமல்லாமல், அதனால் நீங்கள் பாதிக்கப்பட்டாலும். நீடித்த அறிகுறிகளுடன் உங்களை விட்டுச்செல்கிற அளவுக்கு அதை தீவிரமாகவிடாமல் பாதுகாக்கிறது. COVID-19-இன் நீடித்த-இழுவையான அறிகுறிகளால் பாதிக்கப்பட்ட தடுப்பூசி பெறாத சில நோயாளிகளுக்கும் தடுப்பூசிக்குப் பிறகு அறிகுறிகளில் நிவாரணம் கிடைப்பதாக தகவல்கள் உள்ளன.

**பின்வரும் நிலைகளில் உங்கள் உள்ளூர் HR துறையைத் தொடர்புகொள்ளவும் மற்றும் பணிக்கு வராதீர்கள்:**

- ஜுரம் (100.4 °F / 38 °C அல்லது அதற்கு மேல் இருந்தால்) அல்லது சளிக்காய்ச்சல் போன்ற அறிகுறிகள் இருந்தால்
- உங்கள் உள்ளூர் சுகாதாரத் துறை அல்லது சுகாதார வழங்குநரால் சுய-தனிப்படுத்தல் அல்லது சுய-தனிமைப்படுத்தலில் இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டிருக்கிறீர்கள்
- கடந்த 14 நாட்களில் COVID-19 சோதனையில் நேர்மறை முடிவு வந்திருக்கும் அல்லது அதற்காக சோதிக்கப்படும் எவருடனும் நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கிறீர்கள்

**COVID வழிகாட்டல்கள்**

- கைகளை அடிக்கடி கழுவவும்
- கைகளை மற்றவர்களுடன் குலுக்க வேண்டாம்
- இருமும்போதும் தும்மும்போதும் மூடிக்கொள்ளுங்கள்
- மற்றவர்களிடமிருந்து 1-2 மீட்டர் / 3-6 அடி தூரத்தில் இருங்கள்
- சந்திப்புகளைக் குறுகியதாக வைத்திருங்கள்
- பொதுப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்துங்கள்
- மக்கள் கூட்டமுள்ள இடங்களைத் தவிர்த்திடுங்கள்
- நோய்வாய்ப்பட்டிருக்கும்போது வீட்டிலேயே இருங்கள்

**நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகள்**

- உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர்
- மனிதவளக் குழுவின் எந்த உறுப்பினரும்
- சட்டத் துறை அல்லது நெறிமுறைகள் மற்றும் இணக்க அலுவலகம் (ethicsandcompliance@cooperstandard.com)
- உலகளாவிய நெறிமுறைகள் மற்றும் இணக்கக் குழுவின் எந்தவொரு உறுப்பினரும்
- கூப்பர் ஸ்டாண்டர்ட் இன்டெக்ரிடிலைன், விரும்பினால் அநாமதேயமாக*, www.csintegrityline.comஎன்ற இடத்தில்.
  *நாங்கள் செயல்படும் ஒரு சில நாடுகள் அநாமதேய அறிக்கையிடலை அனுமதிப்பதில்லை என்பதை குறித்துக் கொள்ளவும்.